# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## க.பொ.த உயர்தரம் - தமிழ்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2024

நேரம் - 3 மணி　　　　பகுதி I　　　　மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்

**அறிவுறுத்தல்கள்:**

- பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும், எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

### *பகுதி I*

**01.** மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) படுமழை பொழிந்த பயமிகு புறவின்
நெடுநீர் அவல பகுவாய்த் தேரை
சிறுபல் லியத்தின் நெடுநெறிக்கறங்கக்
குறும்புதற் பிடவின் நெடுங்கால் அலரி
செந்நில மருங்கின் நுண்அயிர் வரிப்ப
வெஞ்சின அரவின் பை அணந் தன்ன
தண்கமழ் கோடல் தாதுபிணி அவிழத்
திரிமருப்பு இரலை தெள்ளறல் பருகிக்
காமர் துணையொடு ஏமுற வதியக்
காடுகவின் பெற்ற தண்பதப் பெருவழி
ஓடுபரி மெலியாக் கொய்சுவல் புரவித்
தாள்தாழ் தார்மணி தயங்குபு வியம்ப
ஊர்மதி வலவ! தேரே சீர்மிகு
நம்வயிற் புரிந்த கொள்கை
அம்மா அரிவையைத் துன்னுகம் விரைந்தே.

அ. இச் செய்யுளில் யாரை நோக்கி யாரால் என்ன நோக்கத்தினை அடையும் பொருட்டு கூறப்பட்டது?

ஆ. இச் செய்யுளின் மூலம் காதலுள்ளம் வெளிப்படுமாற்றினை விளக்குக.

இ. இச் செய்யுளில் இடம்பெற்றுள்ள உவமைகளை எடுத்துக்காட்டி விளக்குக.

ஆ) போன படைத் தலை வீரர் தமக்கு இரை போதா இச்
சேனை கிடக்கிடு தேவர் வரின், சிலை மா மேகம்
சோனை படக், குடர் சூறை படச், சுடர் வாளோடும்
தானை படத், தனி யானை படத், திரள் சாயேனோ?

அ. இப் செய்யுள் இடம்பெற்ற சந்தர்ப்பத்தினை விளக்குக.

ஆ. போர்க்களக் காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளதை விளக்குக.

இ. இச் செய்யுளில் இடம்பெறும் உருவகங்களை எடுத்துக்காட்டி விளக்குக.

(12 + 12 = 24 புள்ளிகள்)

**02. (அ)** பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

**(ஆ)** பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அ. மானிடத் தன்மையைக் கொண்டு - பலர்**
**வையத்தை ஆள்வது நாம்கண்ட துண்டு**
**மானிடத் தன்மையை நம்பி - அதன்**
**வன்மையினாற்புவி வாழ்வுகொள் தம்பி!**
**'மானிடம்' என்றொரு வாளும் - அதை**
**வசத்தில் அடைந்திட்ட உன்இரு தோளும்**
**வானும் வசப்பட வைக்கும் - இதில்**
**வைத்திடும் நம்பிக்கை, வாழ்வைப் பெருக்கும்**

**மானிடன் வாழ்ந்த வரைக்கும் - இந்த**
**வையத்திலே அவன் செய்தவரைக்கும்**
**மானுடத் தன்மைக்கு வேறாய் - ஒரு**
**வல்லமை கேட்டிருந்தால் அதைக் கூறாய்!**
**மானிட மென்பது புல்லோ? - அன்றி**
**மரக்கட்டை யைக்குறித் திடவந்த சொல்லோ?**
**கானிடை வாழ்ந்ததும் உண்டு - பின்பு**
**கடலை வசப்படச் செய்ததும் அதுதான்!**

**மானிடம் போற்ற மறுக்கும் - ஒரு**
**மானிடம் தன்னைத்தன் உயிரும் வெறுக்கும்**
**மானிடம் என்பது குன்று - தனில்**
**வாய்ந்த சமத்துவ உச்சியில் நின்று**
**மானிடருக் கினி தாக - இங்கு**
**வாய்த்த பகுத்தறி வாம்விழி யாலே**
**வான்திசை எங்கணும் நீ பார்! - வாழ்வின்**
**வல்லமை 'மானிடத் தன்மை' என்றேதேர்.**

அ. மானுட சக்தியின் ஆற்றல்கள் வெளிக்காட்டப்படுவதை விளக்குக.

ஆ. கவிதையில் கையாளப்பட்டுள்ள உருவகங்களை எடுத்துக்காட்டி விளக்குக.

இ. **"கானிடை வாழ்ந்ததும் உண்டு - பின்பு**
**கடலை வசப்படச் செய்ததும் அதுதான்! "** இவ்வரிகள் மூலம் வெளிப்படுத்தப்படுவதை விபரிக்குக.

ஈ. **பகுத்தறி வாம்விழி யாலே வான்திசை எங்கணும் நீ பார்!** – என்ற தொடர் கவிதையில் பெறுகின்ற முக்கியத்துவத்தை விளக்குக.

**அல்லது**

**ஆ.** எனக்குத் தெரிந்த கிராமத்தைக் கொஞ்சம் வர்ணிக்கிறேன். அதற்கு ஒரே ஒரு தெரு தான் உண்டு. அக்கிரஹாரம் இல்லை. தெருவின் ஒரு கோடியில் கிராம முனிஸீபும் மறு கோடியில் கணக்குப் பிள்ளையும் இருக்கிறார்கள். இருவர் கோபத்துக்கும் ஆளாகாமல் பிழைத்துக் கொள்ளத் தெரிந்த தலையாரி, இந்தத் தெருவுக்குக் கூப்பிடு தூரத்தில் உள்ள மறவர் தெருவில் இருக்கின்றான். இன்னும் பத்துப் பதினைந்து வீடுகள், இந்த வீர மறக் குலத்துக்கு நிழல் தருகிறது. இவர்கள் வாளையும் வேல்கம்பையும் விட்டெறிந்து ரொம்ப காலமாச்சு 'சாதியில் மறவனாக்கு' என்று அதட்டிக் கொண்டு ஏர் பிடித்து உழுகிறார்கள். இவர்களுக்கு எட்டாத் தொலைவில் பள்ளர்கள் சேரி நம் நினைவை விட்டு விரட்ட முயலும் கெட்ட நினைப்பைப் போல, அவர்கள் அங்கு அக்ஞாதவாசம் பண்ணுகின்றார்கள். ஊருக்கு ஒரு மைதானம் உண்டு. சாதாரணமாக மாடு படுத்திருக்கும். ஊர்த் தேவதை திருவிழாவில், வானத்தையே கூரையாகக் கொண்ட கலை மண்டபமாகும். சாணி தட்டவும், நெல் உலர்த்தவும் ஏற்றவையானது. இந்த ஊரிலே சைவச் சாப்பாட்டைச் சமயா சமயத்தில் நிவேதனமாகவும் பொதுவாக அந்தக் கிராமத்தான் வணக்கத்தையும் பார்த்துப் பசியாறும் பிள்ளையாருடைய கோவில் உண்டு. ஊர் எல்லையிலே ஊரின் காவல் தேவதை பேராய்ச்சி கோவில் உண்டு. கோவில் கோவில் என்றதும் பிரமாதமான கற்கனவுகள் என்று நினைத்து விட வேண்டாம். கிராம முனிஸீபு பிள்ளையவர்கள் வீட்டைப் போல அடக்கமானது தான்; அவரது மன இருட்டைப் போல இங்கே கர்ப்பக்கிரகமும் இருட்டிக் கிடக்கும். கலசம் மட்டும் பேராய்ச்சி கோவிலை, கோவிலென்று வேறுபடுத்திக் காட்டும். மற்றப்படி ஒன்றுதான் இந்தத் தேவதை அசைவம். வருஷத்துக்கு ஒரு தடவையாவது ரத்தம் காணவேணும். இல்லாவிட்டால் குடியே முழுகிப் போச்சு.

1. கிராம முனிஸீபு, தலையாரி என்னும் பெயர்கள் யாரைச் சுட்டுவதாக அமைந்துள்ளன?
2. மனித வாழ்வியல்மாற்றம் மக்கள் மத்தியில் நிகழ்வதனை ஆசிரியர் வெளிப்படுத்திக் காட்டுவதனை விளக்குக.
3. கிராமிய வாழ்வியல் அம்சங்களாக எடுத்துக்காட்டப்படுவதனை விளக்குக.
4. ஆசிரியரின் உரைநடையில் நீர் காணும் சிறப்புக்களை விபரிக்குக.

**(16 புள்ளிகள்)**

# பகுதி II

**03. "தெரிந்து தெளிதல்" என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.**

அ. பொதுவகையால் குணமும் குற்றமும் தெரிந்து குணமுடையாரை இனங்காணல்.

ஆ. சிறப்பு வகையால் குணமுடையாரை இனங்காணல்.

இ. ஒருவருடைய குணம் குற்றங்களை ஆராய்வதற்குரிய கருவி.

ஈ. தெளியப்படாதவர்கள் யாவர், அவர்களைத் தெளிவதால் ஏற்படும் இழுக்கு, தெளிவதற்கான எல்லை.

முதலானவற்றை விளக்குக.

**(20 புள்ளிகள்)**

**04. குகனின் நோக்கத்தினை சுமத்திரன் வாயிலாக பரதன் அறிந்து கொண்டது முதல், குகன் வடகரையை அடைய முற்பட்டது வரையான பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றினை விளக்குக.**

அ. குகனைக் காணும் விருப்புடன் பரதன் புறப்பட்ட விதம்.
ஆ. குகன் கண்ணுற்ற பரதனின் கோலம்.
இ. பரதனின் கோலம், குகனிடத்தில் ஏற்படுத்திய நெகிழ்ச்சி.
ஈ. இப் பகுதியில் கையாளப்பட்டுள்ள உவமை அணிகள்.

**(20 புள்ளிகள்)**

**05. கூத்து என்ற சிறுகதையினை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றினை விளக்குக.**

அ. சரவணமுத்து என்ற பாத்திரம் நாகாத்தை மீது கொண்ட அன்பு.
ஆ. கூத்தளிக்கை முறைமைகள்.
இ. கிராமிய வாழ்வியல் அம்சங்கள்.
ஈ. ஆசிரியரின் மொழிநடை.

முதலானவற்றை விளக்குக.

**(20 புள்ளிகள்)**

**06. வ. ராமசாமி அய்யங்காரின் சம்பாஷணை ஒரு கலை என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு**

அ. கலையழகு மிக்க சம்பாஷணையின் இயல்புகள்.
ஆ. சம்பாஷணையில் சொல்லுக்கான அர்த்தத்தை புரிந்துகொள்ளவேண்டும் என்று வெளிக்காட்டப்படும் விதம்.
இ. சம்பாஷணையில் தவிர்க்கப்பட வேண்டியவை.
ஈ. சம்பாஷணையில் நிகரில்லாதவர்களும் அவர்களின் சம்பாஷணையின் சிறப்புக்களும்.

**(20 புள்ளிகள்)**

**07. திருவாசகம் கோயிறிருப் பதிகத்தில்**

அ. இறைவன் ஆட்கொண்ட விதம்.
ஆ. இறைவனின் பெருமைகள்.
இ. மாணிக்கவாசகரின் ஆனந்தக் களிப்பு.

முதலானவற்றை விளக்குக.

**(20 புள்ளிகள்)**

**08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.**

அ. தேம்பாவணி காட்சிப் படலத்தில் யேசுபாலனைக் கண்டு இடையர்கள் அடைந்த இன்பம்.
ஆ. மு. நல்லதம்பியின் 'பாரதியார்' என்ற கவிதையில் பாரதியார் கவிதை மீது கவிஞர் கொண்ட ஈடுபாடு.
இ. காரணமாலையில் மக்கா நாட்டின் இயற்கை வளச் சித்திரிப்பு.
ஈ. ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கின்றது - என்ற நாவலில் நாகேந்திரம் என்ற பாத்திரப் படைப்பு.
உ. தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை என்ற கட்டுரையில் கிராம மக்களின் உளப்பாங்கு.

**(20 புள்ளிகள்)**

# மாகாணக் கல்வித் திணைக்களம்

## வடக்கு மாகாணம்

## க.பொ.த உயர்தரம் - தமிழ்

## ஆறாம் தவணைப் பரீட்சை – 2024

**நேரம் - 3 மணி** **பகுதி II** **மேலதிக நேரம் - 10 நிமிடங்கள்**

**அறிவுறுத்தல்கள் :**

- **பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும், எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**பகுதி II**

**01. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.**

1) பின்வருவனவற்றுள் மருங்கொலி எழுத்து.

1. வ் 2. ய் 3. ர் 4. ழ் 5. ப் ( )

2) பின்வருவனவற்றுள் நுனியண்ணவொலி எழுத்து

1. ன் 2. ண் 3. ட் 4. க் 5. ம் ( )

3) பின்வருவனவற்றுள் ஏகாரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்.

1. ஏர் 2. ஏழை 3. மேன்மை 4. ஏன் 5. ஏக்கம் ( )

4) சொல்லின் இடையில் மூன்று மெய்கள் மயங்கும்போது இரட்டித்து வரும் மெய்

1. ந் 2. ய் 3. த் 4. ழ் 5. ர் ( )

5) பின்வருவனவற்றுள் கூட்டுப் பெயராக அமைவது.

1. வெகுமானம் 2.சன்மானம் 3.தீர்மானம் 4.தன்மானம் 5.வருமானம் ( )

6) மகர ஈறு கெட்டு வல்லினம் மிகும் புணர்ச்சியாக அமைவது.

1. மரம் + கள் 2. பனை + கிழங்கு 3. பழம்+ சோறு

4. வட்டம் + கல் 5. மரம் + கொத்தி ( )

7) "அல்" விகுதி பெற்ற தொழில் பெயராக அமைவது.

1. மோதல் 2. வருதல் 3. தருதல் 4. ஆடுதல் 5. விடுதல் ( )

8) விருப்பு வாக்கியமாக அமையாத வினைமுற்று.

1. தாவேன் 2. தாருங்களேன் 3. தா 4. தாங்களேன் 5. போங்களேன் ( )

9) எழுதுகோல் என்ற சொல்லுக்கு பொருந்தாத இலக்கண விளக்கம்.

1. புறப்புணர்ச்சி 2. கூட்டுப்புணர்ச்சி 3. காரணப்பெயர்

5. இயல்புப்புணர்ச்சி 5. அகப்புணர்ச்சி ( )

10) பகுதியின் ஈற்று மெய் இரட்டித்தல் மூலமாக இறந்தகாலம் காட்டும் சொல்.

1. அழுதார் 2. நனைந்தார் 3. கலைத்தான் 4. முறுக்கினான் 5. தொட்டார் ( )

11) பின்வருவனவற்றுள் குற்றியலுகரப்புணர்ச்சி

1. கருத்துக்களம் 2. நாட்டுநலன் 3. மருந்துப்பொதி

4.எழுத்துலகம் 5.வருந்துகின்றான் ( )

12) குகன் அவசரத்தீர்மானம் எடுத்தான் அவசரத்தீர்மானம் என்பது

1. வேற்றுமைத் தொகை 2.பண்புத் தொகை 3.உம்மைத்தொகை

4.வினைத் தொகை 5.அன்மொழித் தொகை ( )

13) பின்வருவனவற்றுள் இன் சாரியை பெற்று வந்த சொல்

1. சொன்னேன் 2. பாடினேன் 3.மாட்டுக்கு 4 .ஆட்டிற்கு 5. போனேன் ( )

14) செயப்படுபொருள் குன்றாத வினை

1. எழுந்தேன் 2. நடந்தேன் 3. சென்றேன் 4. ஓடினேன் 5.பெற்றேன் ( )

15) இருதிணை, ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுவாக வருகின்ற குறிப்புவினைமுற்று

1. வரும் 2. கரியன் 3. நீதிபதி 4. அகதி 5. வேறு ( )

16) பின்வருவனற்றுள் இடைச்சொல் அல்லாதது

1. வந்து 2. விட 3. இருந்து 4. போல 5. தான் ( )

17) பின்வருவனவற்றுள் படர்க்கை தற்சுட்டுப்பெயர் இடம்பெறாத வாக்கியம்

1. மாலா தன் புத்தகத்தை தொலைத்தாள்.

2. மாணவர்கள் தங்கள் புத்தகத்தை தொலைத்தார்கள்.

3. புலவன் தான் உணர்ந்தவற்றைப் பாடுகின்றான்.

4. தங்களை அன்புடன் அழைக்கின்றோம் .

5. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளில் அக்கறைகாட்ட வேண்டும் . ( )

18) ஓடிய மாடு என்பது.

1. பெயரெச்சம் 2. பெயரடைத் தொடர் 3.பெயரெச்சதொடர்

4.வினையெச்சத் தொடர் 5. வினைத் தொடர் ( )

19) பின்வருவனவற்றுள் கலப்பு வாக்கியம்

1. குகன் சேனையை அழைத்து வீரவசனம் கூறினான்

2. நீ படித்தா படிக்காமலா நாட்களை கழிக்கிறாய்

3. தாயும் மகளும் கடைக்குச் சென்றார்கள்

4. நான் நன்றாக படித்ததால் பல்கலைக்கழகம் சென்றேன்

5. நீ நன்றாக பயிற்சி செய்தால் முதலிடம் பெறுவாய் ( )

20) பின்வறுவனவற்றுள் உம் இடைச்சொல் எண்ணுப் பொருளில் வருவது

1. மூவேந்தரும் வந்தனர்

2. சேரனும் சோழனும் பாண்டியனும் வந்தனர்

3. முப்பது பேரும் வந்தனர்

4. அனைத்தும் அழிந்தது

5. நான்கு கடைகளும் திறக்கவில்லை ( )

**(20 புள்ளிகள்)**

**02.**

**அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.**

''சுவைபட வந்தவை எல்லாம் ஓரிடத்தில் தொகுத்து கூறுவது'' நாடகம் என்பர். ஆற்றுகைக்கலையாக விளங்கும் இது கிரேக்க நாட்டில் தயோனியஸ் வழிபாட்டில் இருந்து தோற்றம் பெற்றது. அக்காலத்தில் இன்பச்சுவை, துன்பச்சுவை சார்ந்த நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. ஓவியம், நடனம், இசை, பாடல் முதலான ஏனைய கலைகளும் இதனோடு தொடர்புபடுவதனால் இது கூட்டுக்கலையாக திகழ்கிறது. ஏற்றத்தாழ்வு, அடக்குமுறை, அரசியல் பிரச்சினை, வர்க்க வேறுபாடு, முதலானவற்றினை கூறி சமுதாயத்தினை வளப்படுத்துகின்ற ஒரு கலையாக வேறு நாடுகளுக்கும் இக்கலை பரவி வளர்ச்சி கண்டது. வேற்றுநாட்டவர் தமது சமயத்தினை பிரசாரம் செய்வதற்கும் நாடகத்தினை பயன்படுத்தியதை அறியக் கிடக்கிறது. இந்த நாடகம் என்ற சொல் சமய இலக்கியங்களிலும் காணப்படுகிறது. திருவாசகத்தில் மணிவாசகர் ''நாடகத்தில் உன்னடியார் போல் நடித்து'' எனப் பாடுகிறார்.

தமிழர் மரபில் கூத்து எனும் கலையிலிருந்து நாடகம் தோன்றியது. கூத்து என்பது ''குதி'' என்னும் அடியாக வந்ததாகும். தமிழ் மக்களின் சமய, சமூக மரபுடன் இக்கலை நெருக்கமான தொடர்பினை கொண்டிருந்நது. பிரதேசத்திற்கு பிரதேசம் பல்வேறு கூத்துக்கள் நிகழ்த்தப்பட்டன. கூத்தினை நெறியாள்கை செய்பவர் அண்ணாவி என அழைக்கப்பட்டார். வடமோடி, தென்மோடி, சிலம்புகூறல், வசந்தன் கூத்து இவற்றுள் சிலவாகும். சிலப்பதிகாரக்கதையைக் கொண்டு ஆடப்பட்டதுதான் சிலம்புகூறல் ஆனால் பிறபண்பாட்டுத் தாக்கம், சாதிய கட்டுப்பாடுகள் என்பனவற்றினால் கூத்து நலிவடையத் தொடங்கியது. பேராசிரியர் சு.வித்தியானந்தன் இக்கலையை பேண முயற்சிகளை மேற்கொண்டார். ஆயினும் இன்றைய நிலையில் அவசர வாழ்க்கை, சினிமா மோகம் இக்கலையினை பாதித்திருப்பது கவலையளிப்பதாகும்.

**(13 புள்ளிகள்)**

**ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

ஓசோன் படையில் ஏற்பட்டுள்ள உடைப்புகளினூடாக ஒழுகும் புற ஊதாக்கதிர்களினால் பூமியின் உயிரின மண்டலம் பெரும் பாதிப்புக்கு ஆளாகின்றது. ஓசோன் வடிகட்டி அனுப்பும் சாதாரண சூரிய ஒளியில் 'மிச்சம் மீதி'யிருக்கும் புற ஊதாக்கதிர்களே அதிக நேரம் படுகின்றபோது ஆபத்து என மருத்துவர்கள் எச்சரிக்கும்போது, வடிகட்டப்படாமல் அப்படியே ஒழுகும் ஒளியில் எவ்வளவு ஆபத்துகள் கரந்துரையும். புற ஊதாக்கதிர்களின் 'பி' வகைக் கதிர்வீசல் மனிதரில், தோலில் புற்றுநோயையும், கண்களில் குருடையும் புரையையும் ஏற்படுத்துகின்றுது. ஓசோன்படையின் ஒவ்வொரு விழுக்காடு அழிவின் போதும் தோலில் புற்றுநோய் தோன்றுவதற்கான வாய்ப்பு இரண்டு விழுக்காடால் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயிர்களின் விளைச்சல் வெகுவாகக் குறைவதோடு மறைமுகமாக நோய்களும் தூண்டப்படுகின்றது.

இப்படித் தரையில் மட்டுமல்ல, தண்ணீரிலுமே கோளாறுகள்தான். கடல்நீரின் ஒளிவலயத்தில் மிதக்கும் அலைதாவரங்களைப் பெருமளவில் பாதிக்கிறது. அவற்றின் உணவு உற்பத்தியில் வீழ்ச்சியை உண்டு பண்ணுகிறது. இந்த தாவரங்கள் எல்லாம் நுண்ணியனவாய் இருந்தாலும், கடலின் வயல்களாக ஒட்டுமொத்தக் கடல் விலங்குகளும் போசிக்கும் உணவு உற்பத்தியாளர்கள் இவைதாம். இந்த அலை தாவரங்கள் பாதிக்கப்படும் போது, கடலின் விலங்குகள் எல்லாமே ஏதோ ஒருபரிணாமத்தில் பட்டினியின் அவலத்தை அனுபவிக்க நேரிடும். அவற்றிலும், உணவுச் சங்கிலியின் முன்வரிசையில் காத்திருக்கும் மீன்களே முதலில் பெரும்

எண்ணிக்கையில் அழிவைச் சந்திக்கும். புற ஊதாக் கதிர்களினால் மீன், இறால், நண்டு போன்ற கடலுயிர்களின் இனப்பெருக்கச் செயற்பாடுகளும் பெரிதும் பாதிக்கப்படுவது கண்டறியப்பட்டுள்ளது

1. உயிரினமண்டலம் பெரும் பாதிப்புக்கு உள்ளாவதற்கான காரணம் யாது?
2. புற ஊதாக்கதிர்கள் தொடர்பாக மருத்துவர்கள் கூறும் கருத்து யாது?
3. ''பி'' வகைக் கதிர்வீச்சால் மனிதர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் யாவை?
4. அலை தாவரங்கள் பாதிக்கப்படுவதனால் எது வீழ்ச்சியடைகிறது?
5. ''உணவு உற்பத்தியாளர்கள்'' என்று உரையாசிரியர் எதனைக் குறிப்பிடுகிறார்?
6. கதிர் தாக்கத்தினால் கடல் விலங்குகளுக்கு உண்டாகும் பாதிப்புக்கள் யாவை?

**(12 புள்ளிகள்)**

**03.பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பினைத் தெரிவு செய்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.**

அ) பாடசாலைக் கல்வியில் வழிகாட்டல் ஆலோசனையின் அவசியம்.

ஆ) சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்.

இ) இன்றைய உலகில் சமாதானத்திற்கான அச்சுறுத்தல்கள்

ஈ) ஊடகங்களும் அவற்றின் சமூகப்பொறுப்பும்.

உ) '' உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்''

**(25 புள்ளிகள்)**

## பகுதி II

04.

அ. பத்துபாட்டில் இடம்பெறும் புறத்திணையில் அடங்கும் நூல்களைத் தருக.

ஆ. இந் நூல்களின் பொருள் மரபு பிற்கால பிரபந்தங்களில் இடம்பெறுவதனை விளக்குக.

இ. ஆற்றுப்படை இலக்கியங்கள் பற்றி சுருக்கமாக கருத்துரைக்குக. **(15 புள்ளிகள்)**

05.

அ. பல்லவர் காலத்தில் பக்தி இலக்கியம் வளர்ச்சியடைந்தமைக்கான காரணங்களை விளக்குக.

ஆ. இப்பக்தி இலக்கியப்பண்பு சோழர்கால காவியங்களில் ஏற்படுத்திய செல்வாக்கினைவிளக்குக.

இ. கம்பர் அல்லது திருத்தக்கத்தேவரின் இலக்கிய பங்களிப்பு குறித்து விபரிக்குக.

**(15 புள்ளிகள்)**

06. ஆரியர்ச் சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த பின்வரும் நூல்கள் குறித்து விபரிக்குக.

அ. புராணங்கள்.

ஆ. பள்ளு

இ. காவியங்கள்

**(15 புள்ளிகள்)**

07. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில்

அ. ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை

ஆ. சைமன் காசிச்செட்டி

இ. சி.வை. தாமோதரம் பிள்ளை

ஈ. தி.த சரவணமுத்துப்பிள்ளை

உ. காசிம் சித்திலெப்பை

ஆகியோரில் மூவர் ஆற்றிய தமிழ்ப்பணிகளை விளக்குக.

**(15 புள்ளிகள்)**

08.

அ.

1. ‘‘நில்’’ என்ற வினையடியாக பிறக்கும் செய்து, செய்ய வாய்ப்பாட்டு வினைஎச்சங்களை தருக?

2. ‘‘நடக்காவிடு‘‘ என்ற பகுதி நிபந்தனைப்பொருளிலும் காரணப்பொருளிலும் வருவதற்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

3. நசைஇ இதில் அளப்பெடுக்கும் எழுத்து எது? அதன் மாத்திரை எத்தனை?

4. ‘‘ஆவது எனும் இடைச்சொல் வரிசைப்பொருளிலும் உம் எனும் இடைச்சொல் எண்ணுபொருளிலும் வருவதற்கு உதாரணம் தருக.

5. I. வண்டி வீதியில் வேகமாக ஓடா

II. நாங்கள் வீடுகள் தோறும் சென்று தேர்தல் பிரசாரம் செய்தோம்.

வழுவினை சுட்டிக்காட்டி வழுவற்ற வகையில் திருத்தி எழுதுக.

**(10 புள்ளிகள்)**

ஆ.

1. வினையடை

2. தொழிற்பெயர்

3. வேற்றுமைப் புணர்ச்சி

**(5 புள்ளிகள்)**